[1972 மார்ச் 28

(e) ஊர்க்காவல் படையும், சிவில் பாதுகாப்பும்.

(f) காவல்துறை ஆராய்ச்சி நிலையம்.

காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) பதவிப் பெயர் தற்பொழுது காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல், ஒருங்கிணைப்பு) என மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்பொழுது சமீபத்திலே தான் மதுரை கார்ப்பரேஷன் ஆயிற்று. இந்த டி.ஐ.ஜி. அதற்குப் பொறுப்பாக இருப்பார்களா? அல்லது தனியாக கமிஷனர் போடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்பற்றிய சில யோசனைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அவைகளைப்பற்றி அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இப்பொழுதிருக்கின்ற டி.ஐ.ஜி.-க்கள் எத்தனை பேர்கள்? மேலும் அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டி.ஐ.ஜி.-க்கள் 11 பேர்களும், அடிஷனல் ஐ.ஜி. ஒருவரும் ஆக இருக்கிறார்கள்.

Regional Public Relations Officers

* 742 *Q.*—THIRU J. JAMES : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Regional Public Relations Officers were appointed;

(*b*) what is the (i) minimum qualification prescribed, (ii) pay fixed and (iii) their service condition;

(*c*) whether they were appointed through Public Service Commission; and

(*d*) if not, the reasons therefor?

1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) (1) அதற்கென அமைந்த விதிகள் (ad hoc rules) இன்னும் அமைக்கப்படாததால் குறைந்த அளவுக் கல்வித் தகுதி குறிக்கப்படவில்லை.

(2) சம்பள விகிதம் ரூ. 550—25—600—35—950.

(3) அதற்கென அமைந்த விதிகள் (ad hoc rules) இன்னும் அமைக்கப்படவில்லை.

(உ) இல்லை.

(எ) இது முற்றிலும் தொழில் நுட்பமான ஒரு வேலை. இது கொள்கையளவிலும் செயலளவிலும் பரந்த செய்முறையாக மக்கள் தொடர்பு, செய்தி, தகவல் தொடர்பு மற்றும் இதுபோன்ற சில நுட்பமான துறைகளைச் சார்ந்தமையால் பணியாளர் தேர்வுக் கழகம் மூலமாக பொருத்தமான நபர்கள் பெறுவது எளிதன்று.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது குறைந்தபட்ச சம்பளம் 500 ரூபாய் என்று கூறினார்கள். விதிமுறைகளும் அதற்கு வகுக்கப்படவில்லை என்று கூறினார்கள். இவ்வளவு மிக அதிகமாகச் சம்பளம் கொடுக்கக்கூடிய வேலைவாய்ப்பைப் பொறுத்து விதிமுறைகள் இல்லாதமுறையிலே நியமனம் செய்யவேண்டிய அவசியம் என்ன? அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்ன? அவர்கள் அரசியல் நோக்கத்தோடு நியமிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பணிகள் என்ன என்ன என்பதை மூலக்கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது சொல்லியிருக்கிறேன். 'விதிகள் இன்னும் அமைக்கப்படவில்லை' என்று தான் சொன்னேன். ஆகவே விதிகள் அமைக்கப்படவே படாது என்று சொல்லவில்லை. அரசியல் நோக்கத்தோடு நியமிக்கப் பட்டதாகச் சொன்னார்கள். இது புதிதல்ல, ஏற்கனவே இருந்து வருகின்ற பதவிகள்தான். காங்கிரஸ் ஆட்சியிலே அரசியல் கட்சிக் காரர்களுக்கு எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பெரிய பட்டியலே என்னிடத்திலே இருக்கிறது, வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன்.

[1972 மார்ச் 28

திரு. நா. வீராசாமி : இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கின்ற ரீஜனல் பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்ஸ் பி.ஏ. படித்தவர்கள்தான் இருக்கிறார்கள். 1967-க்கு முன்னாலே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் கட்சிப் பற்றுள்ளவர்களையும், அரசாங்கத்தின் கொள்கைகளை மக்களின் மத்தியிலே பிரச்சாரம் செய்கிறவர்களையும், நல்ல திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்கிறவர்களையும் அவர்களுடைய கல்வியின் தரம் எஸ்.எஸ்.எல்.சி. பெயிலாகியிருந்தால்கூட அவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஜேம்ஸ் அவர்களுடைய கேள்விக்குக் கூறிய பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பதிலுக்கு அனுசரணையாக திரு. வீராசாமி அவர்களுடைய கேள்வி அமைந்திருக்கிறது, மகிழ்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பொதுஜனத்தொடர்பு அதிகாரிகள் படித்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தின் திட்டங்கள்பற்றியும், எதிர்காலத் திட்டங்கள்பற்றியும் மக்களுக்குச் சரியாகப் பரப்பவில்லை என்பது என்னுடைய கருத்து. நல்ல முறையிலே அவற்றைப் பரப்புவதற்கு அவர்கள் ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களோடு தக்கமுறையிலே தொடர்பு கொண்டால் நல்ல ஆலோசனைகளைக் கூறமுடியும். எனவே அவ்வாறு செய்வதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு மக்கள் தொடர்பு அதிகாரிகள் ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளுடன் அவ்வப்பொழுது தொடர்புகொள்வதற்கு வழிவகை செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்த உத்தியோகஸ்தர்கள் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோல் ஆணை இருப்பதற்கு என்னிடம் விவரம் இல்லை.

1972 மார்ச் 28]

திரு. கா. காளிமுத்து : தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பணியாற்றிவருகின்ற இளைஞர் அணியும் அந்த மக்கள் தொடர்பு அதிகாரிகளின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனித்தனியாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டையும் இணைப்பதோ அல்லது அவர்களை மேற்பார்வைசெய்வதை மேற்கொள்ளச் செய்வதோ இப்பொழுது ஆராயப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக அமைந்திருக்கிற மக்கள் தொடர்பு அதிகாரிகள் எத்தனை பேர்கள் தற்பொழுது அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எட்டு அதிகாரிகள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

Tamil Nadu Raffles

* 743 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Chief Minister be pleased to state the number of Raffle tickets sold so far since its inception and the total amount thus collected?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரையில் (முதல் குலுக்கலிலிருந்து 25-2-1972-ஆம் நாள் நடைபெற்ற 41-வது குலுக்கல் வரையில்) விற்கப்பட்ட பரிசுச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை 25,55,35,773 -ஆகும். அதன் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்தத் தொகை (பெரு மொத்தத் தொகை) ரூ. 27,61,85,673 ஆகும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படிக் கிடைக்கிற தொகைகள் எந்த எந்தத் துறைகளுக்குச் செலவழிக்கப்படு கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது.